செ.வெ.எண்.40 நாள்: 15.06.2019

பி.எம் கிசான் - பிரதம மந்திரி விவசாயிகள் வெகுமதி நிதித் திட்டத்தின் கீழ் சிறு/குறு நில உடைமை விவசாயிகள் பதிவு செய்து பயன்பெறலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

பி.எம் கிசான் எனப்படும் பிரதம மந்திரியின் விவசாயிகள் வெகுமதி நிதித் திட்டத்தின் கீழ் சிறு/குறு நில உடைமை விவசாயிகள் பதிவு செய்யப்பட்டு வெகுமதி நிதி வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது இத்திட்டத்தின் பயனை பெரிய விவசாயிகளுக்கும் கிடைக்கும் வகையில் விரிவு படுத்தப்பட்டுள்ளது. எனவே தூத்துக்குடி மாவட்டத்தில் திட்டத்தின்படி உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு பெரு விவசாயிகளையும் கணக்கெடுக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே தகுதியான பெரு விவசாயிகள் நில உடைமைப் பட்டா எண், ஆதார் அட்டை எண், வங்கிக் கணக்குப் புத்தக முதற்பக்க நகல் விவரங்கள் (வங்கியின் பெயர், கிளை, கணக்கு எண், ஐ.எப்.எஸ்.சி குறியீடு) குடும்ப அட்டை எண், தங்கள் அலைபேசி எண் ஆகிய விவரங்களை ஒரு வெள்ளைத் தாளில் எழுதிக் கையொப்பமிட்டு, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களில் வழங்கிடக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அது போக இதுவரை பதிவு செய்யாத சிறு/குறு விவசாயிகளும் இப்போது பதிவு செய்துகொள்ளலாம்.

பி.எம் கிசான் திட்டத்தின்படி பயனாளிகளின் பெயர் 1.2.2019 தேதியில் நில ஆவணங்களில் இடம் பெற்றிருக்க வேண்டும். இந்த நிபந்தனை மாற்றியமைக்கப்பட்டு 1.2.2019க்கு முன்பு பட்டாதாரர் இறந்து வாரிசு அடிப்படையில் பட்டா மாற்றம் நிகழாத இனங்களில் தற்போது வாரிசு அடிப்படையில் பட்டா மாற்றம் செய்து நில ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட பின்பு அவர்களையும் பயனாளிகளாக சேர்க்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.. எனவே இம்மாதிரியான நேர்வுகளில் உடனடியாக வாரிசு அடிப்படையில் பட்டா மாற்றம் செய்திட மனு செய்து பட்டாவில் பெயர் மாற்றம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளாக சேர்ந்து கொள்ளலாம். எனவே தூத்துக்குடி மாவட்டத்தில் வாரிசு அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யாமல் இருக்கும் விவசாயிகள் உடனடியாக பட்டா மாற்றம் செய்திட ஜமாபந்தியில் மனு செய்து இத்திட்டத்தின் பயனாளியாக சேர்ந்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.